மலான் ஆதரவாளரின் புதிய முயற்சி!

REGD. No. M. 6311 PHONE No. 55630

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

The "Nam Nadu": A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F

தனி இதழ் : ஒரு அணா இலங்கையில் 10 சதம்	சென்னை : ஆவணி 12உ சனி வெளியூர் : ஆவணி 13உ ஞாயிறு	(28—8—54) (29—8—54)	மலர் : 2 இதழ் : 65

அலக்சாந்தரை மிரட்டிய வீரம் எங்கே?

மறைந்தோரின் நினைவு, வழி காட்டும்!

காஞ்சியில் கழகத் தோழர்கள் தீட்டிய கருத்துச் சித்திரங்கள்!

காஞ்சியில் 21—8—54-ல், நடைபெற்ற சமூக சீர்திருத்த மாநாட்டில், பிற்பகல் நிகழ்ச்சியில், கழகத் தோழர்கள் பலர் சொற்பொழிவாற்றிய விவரம் தரப்படுகிறது :—

அ. பொன்னம்பலனார்

"நாம் கண்ட வெற்றி" என்ற தலைப்பில் பேசியதாவது:—

"தென்னாட்டு மக்கள் இன்றைக்கு இருபத்தைந்து அல்லது முப்பது ஆண்டுகளுக்கு முன்னால் வரை சமுதாயத் துறையில் பார்ப்பனர்களின் ஆதிக்கத்திற்கு அடிபணிந்து, தன்மானமிழந்து, சுயமரியாதையைப் பறிகொடுத்து வாழ்ந்து வந்தனர். சுயமரியாதை இயக்கம்தான், இந்த நாட்டு மக்கள் மதத்தின் பெயரால், கடவுள் பெயரால் வஞ்சிக்கப்பட்டு, பார்ப்பனருக்கு அடிமையாயிருக்கிறார்கள் என்பதை உணர்ந்து, மக்களிடையே அறிவுப் பிரச்சாரம் செய்ய முன் வந்தது.

"மனிதன் மனிதனாக மதிக்கப்பட வேண்டும். மனிதப் பிறவியிலே ஏற்றத்தாழ்வு இருக்கலாகாது. பார்ப்பனனாய்ப் பிறப்பதாலேயே அவன் பிறப்பிலேயே உயர்ந்தவனென்கிற எண்ணம் தவறானது. அந்த எண்ணம் இல்லாமற் போனால், பார்ப்பனர்கள் உழைக்காமலேயே சுகமாக வாழ்வதற்காகக் கற்பித்துக் கொண்டிருக்கும் எண்ணற்ற கடவுள்களும், மதங்களும், மூடப்பழக்கங்களும், மடமைச் செயல்களும், விதிநம்பிக்கையும், இன்னபிறவும்! எனவே, அவற்றை

(4-ம் பக்கம் பார்க்க)

2-கோடி பேர் அவதி!

கல்கத்தா, ஆக 26—

கங்கை, பிரம்மபுத்திரா பள்ளத்தாக்கில் 1,000 மைல் நீளப் பிரதேசம் வெள்ளத்தால் பாதிக்கப் பட்டிருக்கிறது!

வட இந்தியாவில் மொத்தமாக 35,000 சதுர மைல் பிரதேசம் நாசமடைந்துவிட்டது என்று தெரிகிறது.

இந்த நூற்றாண்டிலேயே இது போன்ற வெள்ளம் ஏற்படவில்லை என்றும், 2 கோடி மக்கள் இதன் மூலம் அவதியுறுகிறார்கள் என்றும் தெரிகிறது.

மலேயா கம்யூனிஸ்டுகளின் வெறிச் செயல்

இரு இந்தியர்கள் கொலையுண்டனர்

கோலாலம்பூர், ஆக. 27—

பயங்கரவாதிகளுக்கு, தோட்டத்தில் வேலை செய்யும் இந்தியர்கள் உணவளிக்க மறுத்ததால், கம்யூனிஸ்டு பயங்கரவாதிகள், இரண்டு இந்தியர்களைக் கைவேறு, கால் வேறாகத் துண்டித்துக்கொலை செய்தார்களாம்.

மாண்டுபோன இருவர்களில் ஒருவர் பெயர் துரைசாமி என்றும், மற்றொருவரின் பெயர் கோவிந்தன் நாயர் என்றும் தெரிகிறது.

இவ்விருவரையும் பயங்கரவாதிகள் கொலை செய்வதை ஐம்பதுக்கு மேற்பட்ட இந்தியர்கள் தூர நின்று வேடிக்கை பார்த்தார்களாம்!

கொலை நடந்த பின்னர், பயங்கரவாதிகள் கம்யூனிச பாட்டு ஒன்றைப் பாடினார்கள். பாட்டு முடிவுற்றதும், மலேயா கம்யூனிஸ்டு கட்சி, மக்களுக்கு செய்யும் மகத்தான சேவை பற்றி சொற்பொழிவாற்றினார்களென்று தெரிகிறது.

கோவில்களில் பாகிஸ்தான் கொடிகள் பறக்கின்றன!

கலவரத்தில் 10 பேர் மரணம்!

குல்பர்காவில் ஊரடங்குச் சட்டம்

செகந்திராபாத், ஆக. 27—

குல்பர்கா ஜில்லாவில் உள்ள குல்பர்கா, சாகர் என்னும் நகரங்களில் உள்ள கோவில்களின்மீது பாகிஸ்தான் கொடிகள் பறக்கவிடப் படுகின்றனவாம். இதை ஒட்டி நடைபெற்ற கலவரத்தில் 10 பேர் கொலை செய்யப்பட்டிருக்கின்றனர் என்று தெரிகிறது.

கொள்ளையடித்தல், தீயிடுதல் போன்ற நிகழ்ச்சிகளும் நடைபெறுகின்றனவாம்!

சாகரில் கோவில் ஒன்றின் மீது பாகிஸ்தான் கொடியை யாரோ பறக்கவிட்டிருக்கிறார்கள். இதனை ஒட்டி கலவரம் நிகழ்ந்ததாகவும் மூன்று பேர் மரணமடைந்தார்கள் என்றும் தெரிகிறது.

ஐதராபாத் பிரதேச காங்கிரசின் தலைவர் மல்லப்ப கோலூர், போலீஸ் ஐ. ஜி. ஆகியோர் கலவரம் நடைபெற்ற இடங்களுக்குச் சென்றிருக்கின்றனர்.

குல்பர்காவில் உள்ள கணபதி கோவிலில் பாகிஸ்தான் கொடி பறக்கவிடப்பட்டிருந்ததாம். இதனை எதிர்த்து ஊர்வலம் ஒன்று நடைபெற்றதாகவும், பின்னர் கடைகளுக்குத் தீயிடுதல், கொலை செய்தல் போன்ற பலாத்கார சம்பவங்களில் ஆர்ப்பாட்டக்காரர்கள் தங்கள் கருத்தைச் செலுத்தியிருக்கின்றனர் என்றும் கூறப்படுகிறது.

குல்பர்காவில் 7 பேர் கொலை செய்யப்பட்டதாகவும், 19 பேர் காயமுற்றதாகவும் தெரிகிறது.

நகரில் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

ஐரோப்பிய ராணுவ ஒப்பந்தம்

பிரெஞ்சு மேல் சபை நிராகரித்தது

பாரிஸ், ஆக 27—

ஐரோப்பிய இராணுவ ஒப்பந்தத்திற்கு எதிராகப் பிரெஞ்சு மேல் சபை வாக்களித்திருக்கிறது.

அங்கீகாரத்திற்கு எதிராக 100 வாக்குகளும் ஆதரவாக 65 வாக்குகளும் கிடைத்தன.

ஆப்பிரிக்க பெண்களின் வாக்குரிமையை பறிக்க சதி!

சட்டம் இயற்ற கேப் மாகாண அதிகாரியைக் கோரி தீர்மானம்

தேசீய கட்சியின் இனவெறி!

ஐக்கிய கட்சியினரின் எதிர்ப்பு!

கேப்டவுன், ஆக. 27—

நகரசபைத் தேர்தல்களில் கறுப்பர்களின் மனைவிமார்கள் வாக்களிப்பதைத் தடை செய்ய அண்மையில் கேப் மாகாணக் கவுன்சிலில் பதவிக்கு வந்துள்ள டாக்டர் மலானின் தேசியக் கட்சி முயற்சிக்கிறது.

இப்போது நடைபெறும் நகரசபைத் தேர்தல்களில் சொத்துரிமை பெற்றுள்ள 21 வயதுக்கு மேற்பட்டவர்களும் வாக்களிக்க உரிமை பெற்றிருக்கிறார்கள்.

கேப் மாகாணத்தில் தற்போது 200 ஸ்டர்லிங் மதிப்புள்ள சொத்துக்களை உடையோர் நகரசபைத் தேர்தல்களில் வாக்களிக்கிறார்கள். இதில் கறுப்புப் பெண்களும் வாக்களிக்க வாய்ப்புப் பெற்றிருக்கிறார்கள்.

ஓட்டுரிமை பெற்றிருக்கும் இப்பெண்மணிகளை இனி வரும் நகரசபைத் தேர்தல்களில் கலந்துகொள்வதைத் தடுக்கும்பொருட்டு கேப் மாகாணக் கவுன்சில், பார்லிமெண்டுக்கான வாக்காளர் பட்டியலின்படி, முனிசிபல் தேர்தல் நடைபெற ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேப் மாகாண அதிகாரியைக் கோரி தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறது.

பார்லிமெண்டுக்கான வாக்காளர்கள் பட்டியலில் கறுப்புப் பெண்கள் சேர்க்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

தேசிய இயக்கத்தவர்கள் பலர் இந்த இன வெறியை எதிர்த்து பிரச்சாரம் செய்கின்றனர்.

ஆப்பிரிக்கர்கள், பார்லிமெண்டுக்கான தேர்தல்களில் தனி வாக்காளர் பட்டியலில் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். ஆனால், இவர்கள், தங்கள் பிரதிநிதியாக வெள்ளையர் ஒருவரையே தேர்ந்தெடுக்க முடியும். ஆகவே, நகரசபைகளிலும், தங்களுக்கு இருந்த உரிமையையும் பறித்து, தங்கள் பெண்களுக்கு வாக்களிக்கும் உரிமையைத் தட்டிப் பறிக்கும் போக்கை அவர்கள் மிகவும் வன்மையாகக் கண்டிக்கின்றனர்.

கேப் மாகாண சரித்திரத்திலே மாகாண கவுன்சிலில் மலானின் தேசியக் கட்சி பதவிக்கு வந்திருப்பது இதுவே முதல் தடவையாகும்.

கவுன்சிலில் உள்ள எதிர்க் கட்சியினரான ஐக்கியக் கட்சியினர், தேசியக் கட்சியினரின் போக்கைக் கண்டித்திருக்கிறார்கள்.

நகரசபைகளுக்கு வரி கொடுக்கும் மக்கள், தாங்கள் கொடுக்கும் பணம் எவ்வாறு செலவிடப்படுகிறது என்பதைக் கூற உரிமை உடையவர்கள் என்று ஐக்கியக் கட்சியினர் எடுத்துக்கூறுகின்றனர்.

மாகாண கவுன்சிலில் தேசியக் கட்சியினரின் தீர்மானத்திற்கு ஆதரவாக 26 வாக்குகளும் அதை எதிர்த்து 22 வாக்குகளும் கிடைத்தன.

லோகியா விடுதலை

உ. பி. விசேஷ அதிகாரச் சட்டம் செல்லாது

அலகாபாத் உயர்நீதி மன்ற தீர்ப்பு

அலகாபாத், ஆக. 27—

பிரஜா-சோஷலிஸ்டு கட்சியின் காரியதரிசி டாக்டர் ராம்மனோகர் லோகியா தாக்கல் செய்திருந்த 'ஹேபியஸ் கார்பஸ்' மனுவை, அலகாபாத் உயர்நீதி மன்றம் அனுமதித்து அவரை உடனே விடுதலை செய்யுமாறு உத்தரவிட்டது.

உத்திரப் பிரதேசத்தில் உயர்த்தப்பட்ட நீர்ப்பாசன வரியைக் கொடுக்க வேண்டாமென்று லோகியா சொற்பொழிவாற்றியதற்காக உ. பி. விசேஷ அதிகார சட்டத்தின் கீழ் அவர் கைது செய்யப்பட்டிருந்தார்.

லோகியாவைக் கைது செய்ய அனுமதித்த அச்சட்டத்தின் பிரிவு, இந்திய அரசியல் சட்டத்திற்கு முரணானது என்று தீர்ப்பளிக்கப்பட்டது.

இத்தீர்ப்பை ஒட்டி, உத்திர பிரதேசத்தின் விசேஷ அதிகார சட்டத்தின் மூலம் தண்டிக்கப்பட்டு சிறையில் வைக்கப்பட்ட அனைவரும் —2,205 மேற்பட்டவர்கள்—விடுதலை செய்யப்பட்டனர்.

"வரி கொடுக்க வேண்டாமென்று மக்களிடையே பிரசாரம் செய்வது, தடுக்கப்படுவது, இந்திய அரசியல் அமைப்பின் 19 (1)-ஏ. பிரிவு அளிக்கும் பேச்சு சுதந்திரத்திற்கு எதிரானதாகும்," என்று அலகாபாத் உயர் நீதி மன்றம் தீர்ப்பளித்தது.

இந்தியாவில் உள்ள நிலக்கரிச் சுரங்கங்களில் 1953-ல் வேலை பார்த்துவந்த தொழிலாளரின் தினசரி சராசரி எண்ணிக்கை 3,37,796 ஆகும். இவர்களில் 1,81,973 பேர் பூமிக்கடியில் வேலை பார்த்து வந்தனர்.

அலக்சாந்தரை மிரட்டிய...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

எல்லாம் ஒழித்து, எல்லோரும் ஓர் குலம் என்கிற நிலைக்கு மக்கள் கொண்டுவரப்பட வேண்டும் என்று நாம் பேசி வந்தோம்.

அந்த நமது இடைவிடாத பிரச்சாரத்தின் பலனும், இன்று, நாட்டு மக்கள் விழிப்புணர்வு பெற்று, பகுத்தறிவு பெற்றவர்களாய் முன்னேறி வருவதை நாம் காண்கிறோம். நாம் செய்து வருகிற இந்த சமூகப் பணியின் பலனும் இன்று நல்ல பல காரியங்கள் கூட நடைபெற்றிருக்கின்றன. தீண்டாமை சட்ட விரோதமாக்கப் பட்டிருக்கிறது.

நாம் அன்று கூறிவந்திருக்கிறோம்—"மனிதனை வேறுபடுத்தாதே; உயர்ந்தவன், தாழ்ந்தவன் என்று பிரிக்காதே; இவன் தொடக்கூடாதவன் என்று ஒதுக்காதே; சாதிப் பெயரைக் காட்டிப் பெருமைப்படாதே"—என்றெல்லாம்!

இன்று, இருதார மணத் தடைச் சட்டம் அமுலுக்கு வந்திருக்கிறது.

அன்று நாம், தொடர்ந்து சொல்லிவந்திருக்கிறோம்—"கற்பென்றால், ஆணுக்கும் பெண்ணுக்கும் ஆக இருவருக்கும் வேண்டும்; ஆண் மட்டும் எப்படி வேண்டுமானாலும் இருக்கலாம், பெண் மட்டும் கல் என்றாலும் கணவன் என்ற கட்டுப்பாட்டிற்கு அடங்கி நடக்கவேண்டும் என்று இருப்பது கூடாது"—என்று சொன்னோம்!

தாசி ஒழிப்புச் சட்டம் போன்றவைகளும் நமது பணியின் விளைவாகப் பெறப்பட்டவைதான்."

★

தோழியர் அருண்மொழி

"மகளிர் கடமை" எனும் தலைப்பில்; திராவிடச் சமுதாயத்தில் மகளிர் நிலை எவ்வளவு அவலமாயிருக்கிறதென்பது குறித்தும், அந்த அவல நிலை போக தாய்மார்கள் எப்படி எல்லாம் பணியாற்ற வேண்டும் என்பது பற்றியும் விரிவுரையாற்றினார்.

★

ஏ. வி. பி. ஆசைத்தம்பி

"மறைந்த மாவீரர்கள்" எனும் தலைப்பில் பேசியதின் சாரமாவது:—

"திராவிடர் இயக்கத்தின் சரித்திரத்திலே பொறிக்கப்படுகிற மேலான நிலையைப் பெற்றுள்ள மாவீரர்கள் பலர் மறைந்து விட்டனர், நம்மிடமிருந்து!

மறைந்த அந்த மாவீரர்களின் லட்சியப் பாதையில் இன்று தொடர்ந்து நடந்து கொண்டிருக்கும் நமக்கு, மறைந்த அவர்களின் உருவங்கள் கண்முன் தெரிந்துகொண்டே இருப்பது மிக அவசியமாகும்.

ஒரு காலத்தில் சுயமரியாதை இயக்கக் கருத்துக்களை எடுத்துச் சொல்வதற்குப் பகிரங்க கல் வீச்சுகளும், கத்திக் குத்துகளும் நமக்குக் கிடைத்திருக்கின்றன. அல்லால் அடி வாங்கிக்கொண்டே கருத்துக்களைச் செலுத்திக்கொண்டே இருந்தார், மறைந்த மாவீரர் அழகிரி! அவர் இந்த சமுதாயப் பணியை மேற்கொண்டதினால், உடல் நலிவுற்று உயிர் இழந்தார்! அவர் இடைவிடாத பிரச்சாரமே, சமுதாயப் பணியே அவரைக் கொன்றது!

இன்னும் பெரும் பொருளாதார நிபுணன் என்று கருதப்பட்ட பன்னீர் செல்வத்தை கடல் விழுங்கிவிட்டது என்று நாம் கொண்டோம். அதிலே கூட பார்ப்பனியச் சதி இருந்திருக்கக் கூடுமோ என்று சந்தேகப்பட வேண்டியிருக்கிறது. அவர் இந்த நாட்டு மக்களுக்குச் செய்திருக்கும் சேவை மகத்தானது; மறக்க முடியாதது!

மொழிப் போரில் உயிர் நீத்த தாளமுத்து—நடராசன், கழகக் கொள்கைகளைக் கொண்டிருந்தவர் என்பதற்காகக் கொல்லப்பட்டு கயிற்றிலே தொங்கவிடப்பட்ட உடையார்பாளையம் வேலாயுதம், குத்திக் குடல் சரிக்கப்பட்ட நெல்லிக்குப்பம் மஜீத், சென்னை பாண்டியன், கடந்த நமது போராட்டங்களின்போது ஆச்சாரியாரின் துப்பாக்கிப் பிரயோகத்தில் மாண்ட ஆறு வீரர்கள், இன்னும் கழகத்தைக் கட்டிக் காக்கும் வீரர்களை காலிகள் தாக்க, கழகத் தோழர்கள் பட்டிருக்கிற குத்து வெட்டுக்காயங்கள் என்ன கொஞ்சமா?

இப்படி எத்தனை எத்தனையோ வீரர்களின் வீரச் செயல்களும் மகத்தான பணியும், நாம் தொடர்ந்து கழகத்திலே பணியாற்றத் தூண்டுகோலாயிருக்கிறது என்பதையும் எண்ணிப் பார்க்க வேண்டிக் கொள்கிறேன்."

★

சி. பி. சிற்றரசு

"வரலாற்றில் நாம்" என்னும் பொருள் பற்றிப் பேசியதாவது:—

இந்தியாவின் மீது படையெடுத்து வந்தான் அலெக்சாண்டர்; விந்திய மலைவரையிலே இந்தியாவை வென்று வெற்றிக்கொடி நாட்டிவிட்டு தன் தளபதியைப் பார்த்துக் கேட்டானாம்—'தொடர்ந்து தெற்கே படையுடன் புறப்படுவோமா?'—என்று!

'வேண்டாம் மன்னனே!' என்று கூறிய தளபதி மீது சீறி விழுந்த அலெக்சாண்டர், தளபதியிடம் கேட்டானாம்—'யாரிடம் பேசுகிறாய் என்பது உனக்குத் தெரிகிறதா? யாரிடம் தளபதியாக இருக்கிறோம் என்பதைக்கூட நீ மறந்து விட்டாயா?'—என்று!

'மன்னனே! நினைவிருக்கிறது; நன்குத் தெரிகிறது, நான் யாருடன் பேசிக் கொண்டிருக்கிறேன், யார் முன் நிற்கிறேன் என்று; என்றாலும், நாம் விந்தியத்தைத் தாண்ட வேண்டாம்,' என்று கூறினானாம், தளபதி!

'ஏன்,' என்று கோபத்துடன் கேட்டானாம், மன்னன்!

'அங்கே திராவிடர்கள் வாழ்கிறார்கள்,' என்று மட்டும் சுருக்கமாகக் கூறிய தளபதியின் சொற்றத்தை நிறுத்தினான் அலெக்சாண்டர்! இது வரலாறு.

அலெக்சாண்டர் கண்டு மிரளும் படியான அளவு வீரத்தோடு உலகிய ஆற்றலைக் கொண்ட திராவிட இனத்தவர், இன்று எந்த நிலையில் இருக்கிறார்கள்? ஏன், இந்த இழி நிலைக்கு எப்படி வந்தார்கள்? இந்த இழிநிலை இன்னும் துடைக்கப்படாமலிருப்பது ஏன்?-என்ற கேள்விகளை தோழர் சிற்றரசு அவர்கள் எழுப்பி, பதில்களும் தந்தார்.

(பின்னும் வரும்)

திருமணம்

30—8—54 காலை 9 மணிக்கு தோழர் வீ. துரைசாமி—தோழியர் சாரதாமணி திருமணம் முசிறி தாலுகாவைச் சேர்ந்த திருநாக்கோயம்மையில் அருகே குஞ்சரநாயக்கன்பாளையம் மணமகன் இல்லத்தில் பொதுச்செயலாளர் அண்ணாதுரை அவர்கள் தலைமையில் நடைபெறும்.

* * *

30—8—54 காலை 10 மணிக்கு திருவள்ளூரில், தோழர் பி. வி. பெருமாள்—தோழியர் அமிர்தம் சீர்திருத்த திருமணம் தோழர் எம். பி. ஜி. சாமி தலைமையில் நடைபெறும். தோழர் டி. ஆர். வரதன் பேசுவார்.

கழகக் கூட்டங்கள்

★

கல்லக்குடி தி.மு.க. முதல் ஆண்டு விழாப் பொதுக்கூட்டம்

29—8—54 மாலை 6 மணிக்கு
தலைவர்: அ. தம்புசாமி
பேசுவோர்:
சி. என். அண்ணாதுரை
ஏ. பி. தருமலிங்கம்
அ. பொன்னம்பலனார்

* * *

குறிப்பு:—காலை 8 மணிக்கு அன்பில் தோழர் ஏ. பி. தருமலிங்கம் அவர்கள் தி. மு. கழகக் கொடியை ஏற்றி வைப்பார். காலை 10 மணிக்கு கழக அங்கத்தினர்கள் கூட்டம் நடைபெறும்.

★

திருச்சி

டவுன் ஹால் முன்
30—8—54 மாலை 6 மணிக்கு
தலைவர்: எம். எஸ். மணி
பேசுவோர்:
சி. என். அண்ணாதுரை
அ. பொன்னம்பலனார்
கே. ஆர். ராமசாமி

★

துறையூர்

அரண்மனை பிள்ளையார் கோயில் திடலில்
31—8—54 மாலை 6 மணிக்கு
தலைவர்:
பி. அரங்கசாமி, எம். எல். ஏ.
பேசுவோர்:
சி. என். அண்ணாதுரை
அ. பொன்னம்பலனார்

* * *

31—8—54 மாலை 3 மணிக்கு துறையூர் பஞ்சாயத்து போர்டார் பொதுச்செயலாளர் அண்ணாதுரை அவர்கட்கு வரவேற்பு அளிப்பார்கள்.

★

வீரசோழபுரம்

தி. மு. கழக துவக்கவிழா
அம்மன் கோவில் முன்வெளியில்
30—8—54 மாலை 6 மணிக்கு
தலைவர்: கி. அரங்கநாதன்
பேசுவோர்:
என். வி. நடராசன்
ம. கோ. மணி
சி. என். ராசன்

சொற் பயிற்சிக் கூட்டம்

29—8—54 காலை 10 மணிக்கு சென்னை முத்தியால்பேட்டை நெ. 17, சாலைவிநாயகர் கோயில் தெருவிலிருக்கும் முத்தமிழ் மன்றத்தில் தோழர் க. வி. இராதாகிருட்டிணன் தலைமையில், 'மதியும், விதியும்' என்ற பொருள் பற்றி தோழர்கள் பலர் பேசுவார்.

நகர இளைஞர் கழகம்

29—8—54 காலை 9 மணிக்கு சென்னை, சூளை, மாணிக்கச் செட்டித் தெருவில் மேற்படி கழகக் கட்டிடத்தில் 'அரசியல் நிர்ணயம்' என்பது பற்றி தோழர் எ. திருமலை பேசுவார்.

பம்பாய் தி. மு. கழக செ. கு. உறுப்பினர்கட்கு

1—9—54 மாலை 4½ மணிக்கு பம்பாய், தாராவி குடியரசு நிலையத்தில் பம்பாய் தி மு கழக முதல் மாநாட்டு வரவேற்புக் குழுக் கூட்டம் வ. கு. தலைவர் தோழர் வை. வள்ளிநாயகம் தலைமையில் நடைபெறும். அதுபோது மாநாட்டிற்கு நாள் நிர்ணயித்தல், நடத்தையைப் பற்றி முடிவெடுத்தல் ஆகிய பிரச்சினைகள் பற்றி கலந்தாலோசிக்கப்படும்.

கோவை மாவட்ட உழவர் மாநாடு
செப்டம்பர் 4, 5 தேதிகளில் (U. M. S. ஜங்ஷன்)
பல்லடத்தில் நடைபெறும்
தலைவர்: Dr. P. வரதராஜுலு நாயுடு, M. L. A.,
திறப்பாளர்: முதல் மந்திரி கனம் காமராஜ நாடார்
C. N. அண்ணாதுரை, G. D. நாயுடு
மற்றும் பல முக்கிய தலைவர்கள்
கலந்து சொற்பொழிவாற்றுவார்கள்
நடனம், இசை விருந்து, விவசாய யந்திர
கண்காட்சி முதலியன நடைபெறும்
வரவேற்புக் குழு தலைவர்: M. வெங்கடாசல கவுண்டர்
செயலாளர்: P. M. பொன்னுசாமி

திராவிட நாடு பிரிவினை அவசியம்

உழவர் கட்சியின் ஆதரவு

ஏழைகள் நியாயம் கிடைக்க உறுதி

ஜூலை 19-ல் கள்ளக்குறிச்சி தாலுக்காவில் தோழர் ஏ. கோவிந்தசாமி எம். எல். ஏ. தலைமையில் உழவர் கட்சி மாநாடு நடைபெற்றது. மாநாட்டை வரவேற்று திரு அரங்கசாமிக் கவுண்டரும், மாநாட்டைத் துவக்கி வைத்து தோழர் சாமிநாதன் அவர்களும் பேசினர்.

பின்னர் சிற்றுளி-சுப்ரமணியம், என்னியர்கட்கு முழு சம்பள நீக்க உரிமை அளித்திருப்பதாகச் செய்தித் தாள்களில் வெளியானதைக் கண்டு, என். ராமசாமி படையாட்சியார்தான் கொண்டுவந்தாரென்று கேட்கிறார்கள்; ஆனால், இது 2 ஆண்டுக்கு முன்பு சட்டசபையில் தோழர் ஏ. கோவிந்தசாமி, வி. கோபால் கவுண்டர் கொண்டுவந்த தீர்மானமேயன்றி வேறொன்றும் இல்லை எனக் கூறினார். இன்றைய அரசியலில் உழைப்பாளி கட்சியினுடைய பரிதாப நிலையை பற்றி விரிவாகப் பேசினார்.

தோழர் ஏ. கோவிந்தசாமி, எம். எல். ஏ., அவர்கள், தனது முன்னுரையில் காங்கிரசுடன் இணைந்த உழைப்பாளி கட்சி, பிற்பட்ட பாட்டாளிகளுக்கென எந்தத் திட்டத்தையும் உருவாக்கித் தர முடியாதெனவும், அரசியலில் பல தலைவர்கள் சுயநலமிகளாய்ப் பொன்று பதவிக்காக ஊழ்க்கி விழுவது சாதாரண நிகழ்ச்சியாகிவிட்டது என்றும், ஆகவே, மக்கள் விழிப்போடு இருந்து, இதுபோன்ற தலைவர்களைப் பின்பற்றாமல் இருக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார்.

பிற்பட்டோர் மிகுந்துள்ள ஏழை மக்கட்கு உழவர் கட்சி உதவியாக எல்லா நன்மைகளையும் செய்யத்தான் போகிறதென்றும், வரப்போகும் தேர்தலில் காங்கிரசு-உழைப்பாளி கட்சி இரண்டும் ஒன்று சேர்ந்து இரண்டாம் முறையாகக் கட்சிகளுடன் போட்டியிட்டால் மக்கள் அதை முறியடிக்க வேண்டுமென்றும், உழவர் கட்சிக்கு எல்லா முற்போக்கு கட்சிகளும் தேர்தலில் ஆதரவு தரவேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார்.

பின்னர், கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன:—

வடநாட்டின் பிடியிலிருந்து விலகி, தனி சுதந்திர திராவிட நாடு பிரிய இம்மாநாடு ஆதரிப்பது, உடனடியாக திராவிட நாட்டை பிரித்துக் கொடுக்கும்படி மத்திய சர்க்காரைக் கேட்டுக் கொள்வதும், தென்னாற்காடு மாவட்டத்திலுள்ள 4 இலட்சம் ஏக்கர் தரிசு நிலங்களை நிலமற்ற ஏழை ஆதிதிராவிடர்களுக்கும், இதர பிற்பட்ட இனத்தாருக்கும் பட்டா செய்து கொடுக்கும்படி சர்க்காரைக் கேட்டுக் கொள்வதும், சென்ற பொதுத் தேர்தலில் உழைப்பாளி கட்சியாக இருந்த சமயத்தில் ஆதரித்த எல்லா முற்போக்குக் கட்சிகளுக்கும் நன்றி தெரிவித்தும், வருகின்ற மாவட்ட போர்டு தேர்தலில் உழவர் கட்சியை எல்லா முற்போக்கு கட்சிகளும் பொது மக்களும் ஆதரிக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்வதும், கள்ளக்குறிச்சி தாலுகாவில் உடனடியாக மின்சாரம் கிடைக்கக் கொண்டுவர வேண்டுமென்று சர்க்காரைக் கோரியும், சின்ன சேலம் டவுனில் ஒரு பிரசவ விடுதியும் மேற்படி தாலுகா வடக்கு கந்தன் பிரிவிலே ஓடும் கோமுக நதியில் ஒரு அணை கட்டித் தர வேண்டுமெனவும், சர்க்காரைக் கேட்டுக்கொண்டும், உழவர்களைப் புறம்போக்கு நிலங்களிலிருந்து கட்டாயப்படுத்தி வெளியேற்றுவதை நிறுத்தவும், அவர்களுக்கு விதிக்கப்பட்ட அபராதத்தை வசூலிக்க வேண்டாமென சர்க்காரைக் கோரியும், விவசாய கடன் ஒத்திவைப்பு மசோதாவை மீண்டும் 3 ஆண்டுக்கு நீடிக்கவேண்டுமென்றும், நிலச் சீர்திருத்தத்தை உடனடியாக நிறைவேற்ற வேண்டுமென்றும் சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறது என்றும், புதுச்சேரி, காரைக்காலின் அந்நிய ஏகாதிபத்தியத்தை எதிர்த்து போராடிய தொண்டர்களைப் பாராட்டியும், தி. கொ.—கொச்சியில் நடக்கும் தமிழர் போராட்டத்தை வரவேற்றும், புதுச்சேரி, காரைக்கால் ஆகியவைகள் இந்திய யூனியனில் சேரும் வரை மாவட்ட போர்டு தேர்தலை நிறுத்திவைக்கும்படியும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இந்தியாவில் 'பவர் டிரான்ஸ்பார்மர்'களின் உற்பத்தி 1952-ல் 2,14,950 கிலோ-வாட்-ஆம்பியராக இருந்தது. 1953-ல் 3,11,471 கிலோ-வாட்-ஆம்பியராக அதிகரித்திருக்கிறது.

[illegible]